பதிவு எண்: ம. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: பங்குனி 5 (18—3—68) திங்கள் ★ வெளியூர்: பங்குனி 6 (19—3—68) செவ்வாய் [இதழ்: 230

குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்

பிள்ளையோ பிள்ளை தொல்லையோ தொல்லை என்கின்ற நிலை ஏற்படாமல், குடும்பம் தெவிட்டாத இன்பமாக விளங்கவும், குழந்தைகள் அறிவு நிறைந்து ஆற்றல் மிகுந்தவர்களாக இருக்கவும் அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்.

### பாண்டிச்சேரியில் மயக்கநிலை:

## மரைக்காயர் மாறுகிறார்—குபேர் வருகிறார்!

### ரெட்டியார் இருப்பாரா?

['நம் நாடு' செய்தி நோக்கு]

"முன்னாள் முதலமைச்சர் பரூக் மரைக்காயர் தலைமையில் ஆறு காங்கிரசு உறுப்பினர்கள் கட்சி மாறி, எதிர்க் கட்சி அமைப்பில் சேர இருக்கிறார்கள்" என்று பாண்டிச்சேரி தரும் தகவலொன்று மட்டும் உண்மையாக இருக்குமானால், 'பீகார் போன்ற ஒரு நிலைமை, சிறிய அளவில் காங்கிரசு ஆளும் புதுவையிலும் உருவாகிவிட்டது' என்று கூறலாம்!

காங்கிரசுக் கட்சியில் ஏற்பட்டிருக்கும் குழப்பம்—கோஷ்டிப் பிளவு—ஆகியவைகள் காரணமாகக் குடியரசுத் தலைவரின் 'பிடி'யில் சிக்க இருக்கும் பீகாரைப்போலவே பாண்டிச்சேரியிலும் கோஷ்டிப் பிளவும், குழப்ப நிலையும், கட்சி மாறும் தந்திரமும் காங்கிரசுக்குள் இருப்பதாகத் தெரிகிறது!

30 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் புதுவைச் சட்டமன்றத்தில், ஒன்பதுபேர்களைக் கொண்ட எதிர்க் கட்சியின் 'சனநாயகக் கூட்டணி' மரைக்காயர் தலைமையில் வரும் 6-காங்கிரசு உறுப்பினர்களையும் சேர்த்துக்கொள்ள இருப்பதால், வெங்கடசுப்பா ரெட்டியாரின் புதிய அமைச்சரவை, துவக்கத்திலேயே ஒரு 'சக்திமிக்கப் போட்டி'யினைச் சந்திக்க நேரிடுகிறது!

அமைச்சரவையின் ஆயுட் காலத்துக்கு ஒரு சோதனையாக உருவாகியிருக்கும் எதிர்க் கட்சியின் சனநாயகக் கூட்டணிக்கு, 'பாண்டிச்சேரியின் முக்கிய மனிதர்' என்று கருதப்படும் மற்றொரு முன்னாள் முதலமைச்சர் குபேர் தலைமை தாங்குவார் என்று கருதப்படுகிறது.

"எதிர்க் கட்சியின் கூட்டணி எண்ணிக்கை 16-ஆக இருப்பதால், 30-உறுப்பினர்கள் கொண்ட சட்டமன்றத்தில், வெங்கடசுப்பா ரெட்டியார் அமைச்சரவை 'உயிர் வாழ்வது'—திடீர்த் திருப்பம் ஏதும் ஏற்படாதவரையில்—முடியாத காரியம்" என்பது நம்பப்படுகிறது!

**'பாண்டிச்சேரி மக்களின் பொது நன்மை' கருதியே எதிர்க் கட்சி முன்னணியில் 6-பேர்களின் துணையுடன் சேர்ந்திருப்பதாக அறிவிக்கப்படும் மரைக்காயர் கருத்து மட்டும் முடிவானது என்றால், இனி அவர், ஒரு முன்னாள் முதலமைச்சர் மட்டுமல்ல—முன்னாள் காங்கிரசுக்காரர் என்ற பெயருக்கும் உரியவராகிறார்!**

எந்தக் காமராசரை, 'எனது தனிப் பெரும் தலைவர்' என ஏற்றுக்கொண்டிருப்பதாகப் பலமுறை பரூக் மரைக்காயர் கூறியிருக்கிறாரோ—அதே காமராசர்தான் இப்போது, வெங்கடாசுப்பா ரெட்டியாரை காங்கிரசு அமைச்சரவைக்கு முதலமைச்சராக ஆக்குவதற்கு ஆலோசனை கூறியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்பு, எந்தக் காங்கிரசு அமைச்சரவை வீழ்வதற்குக் காங்கேயன் வழிவகுத்தாரோ, அதே காங்கேயனுக்கு இப்போது காங்கிரசு அமைச்சரவையில் முக்கிய அமைச்சர் பதவி தருவதுதான் மரைக்காயரின் 'கோப'த்துக்குக் காரணம்—என்று, அவரே தந்துள்ள அறிக்கை கூறுகிறது.

**உண்மைக் காங்கிரசுக்காரர்கள் வெளியே செல்ல—காங்கிரசின் வீழ்ச்சிக்கு முன்பு காரணமாக இருந்தவர்கள் இப்போது காங்கிரசுக்குள் நுழைய—வேடிக்கையும் வேதனையும் கொண்ட பாண்டிச்சேரி நிலைமை, துவக்க முதல் காமராசரின் பொறுப்புக்கு விடப்பட்டிருந்தது என்பது இங்கு நினைவுகூரத்தக்கது!**

## ஊர்க்காவல் படை நீடிக்கும்

### முதலமைச்சர் அண்ணா அறிவிப்பு

சென்னை, மார்ச் 18—

"ஊர்க்காவல் படையை அரசு மேலும் தொடர்ந்து செயல்படுத்தும்; நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் நேரத்தில் அஞ்சாது எதிர்த்துப் போரிடும் நெஞ்சுரம் கொண்டவர்களாக உள்ளவர்கள், இப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்; போலீசுப் படைக்குத் துணையாகவும், அவசரக் காலங்களில் பொது மக்களுக்கு உதவியாகவும் பாதுகாப்புப் படையுடன் இணைந்தும் இவர்கள் செயல்படுவார்கள்"

என்று, இன்று சட்டமன்றத்தில், கழக உறுப்பினர் மலைச்சாமியின் கேள்விக்கு விடையளிக்கையில் முதலமைச்சர் அண்ணா கூறினார்.

பல துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேலும் கூறியதாவது:—

"ஊர்க்காவல் படையினர் செய்யும் பணி வேறு—சீருடைப் படை

(4-ம் பக்கம் பார்க்க)

# துயர்துடைப்புப் பணியில் தமிழக அரசு காட்டும் அக்கறை

## தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி இரட்டிப்பு

### கடனளிக்க முன்வந்த மத்திய அரசு மானியம் வழங்குவதில் 'மௌனம்'

### சட்டமன்றத்தில் அமைச்சர் கே. ஏ. மதியழகன் விளக்கக் குறிப்பு

சென்னை, மார்ச் 18—

"துயர் தணிப்புத் திட்டத்தின்கீழ்—இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட ஒவ்வோர் ஏழைக் குடும்பத்திற்கும், அவருடைய வீட்டைத் திரும்பக் கட்டிக்கொள்வதற்கு அல்லது பழுது பார்ப்பதற்கு ரொக்க மானியமாக ரூ. 30-ம், இழந்த துணிகளையும் பாத்திரங்களையும் திரும்ப வாங்குவதற்கு உடை மானியமாக ரூ. 10-ம் அளிக்கப்படுகிறது. தீ விபத்துக்களைப் பொறுத்தவரையில், மேலே குறிப்பிடப்பட்டுள்ள உதவித் தொகை போதாது என்று அரசு கருதுகிறது, எனவே, தீ விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டும் 1967 சூலை 1-ந்தேதி முதல் ரொக்க மானியத்தை ரூ. 30-லிருந்து ரூ. 60 ஆகவும், உடை மானியத்தினை ரூ. 10-லிருந்து ரூ. 20 ஆகவும் அரசாங்கம் உயர்த்தியுள்ளது."

என்று, இன்று சட்டமன்றத்தில் வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், துயர் தணிப்பு மானியக் கோரிக்கையையொட்டி சட்டமன்றத்தில் வைத்த விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'துயர் தணிப்புப் பணி'யினைப் பற்றி அதில் பின்வருமாறு விளக்கப்பட்டிருக்கிறது:—

புயல் காரணமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் 5,000 குடிசைகளும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 10,000 குடிசைகளும் சேதமடைந்தன.

புயலினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் முறையே பணவுதவி ரூ. 30-ம், உடை மானியமாக ரூ. 10-ம் அளிப்பதற்கான செலவிற்காக இராமநாதபுரம் கலெக்டருக்கு ரூ. 2-இலட்சமும், தஞ்சாவூர் கலெக்டருக்கு ரூ. 4-இலட்சமும் அளிப்பதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியிள்ளது.

மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு அளிப்பதற்கான செலவிற்காக ரூ. 27,200-க்கும், தஞ்சாவூர் மாவட்டத்தில் இலவசமாக உணவளிப்பதற்கான செலவிற்காக ரூ. 16,000-க்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

#### நெற்பயிருக்காகக் கடன்

தஞ்சாவூர் மாவட்டத்தில் 50,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த தாளடிப் பயிர் நீரில் மூழ்கிவிட்டது. 20,000 ஏக்கரில் காலங் கடந்து பயிரிடப்பட்ட தாளடிப் பயிர் நாசமாகிவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இப்பரப்பளவில் திரும்பவும் பயிரிட வேண்டியிருந்ததால் தஞ்சாவூர் மாவட்டக் கலெக்டருக்கு ரூ. 1-இலட்சம் ஒதுக்க அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது.

தாளடிப் பயிரைத் திரும்பவும் பயிரிடுவதற்காக ஒவ்வொரு ஏக்கருக்கும் ரூ. 60-க்கு மேற்படாத வட்டியில்லாக் கடனை விதையாகவும், இரசாயன உரங்களாகவும் அளிப்பதற்காக அந்தப் பணம் வழங்கப்பட்டது.

#### நிலங்களைப் பண்படுத்தக் கடன்

ஏறத்தாழ இராமநாதபுரம் மாவட்டத்தில் 4,000 ஏக்கர் பரப்பளவும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 500 ஏக்கர் பரப்பளவும், புயல் காரணமாக மண் மேடிட்டது.

மண்ணடிக்கப்பட்ட நிலங்களைப் பண்படுத்துவதற்காக ஒவ்வொரு ஏக்கருக்கும் ரூ. 200-க்கு மேற்படாதகடன்அளிப்பதற்காகஇராமநாதபுரம்மாவட்டத்திற்கு ரூ 4 இலட்சமும், தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ரூ. 50,000-மும் வழங்குவதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்தது.

#### மீனவர்களுக்கு உதவி

இராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களில், புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 50 : 50 என்ற விகிதத்தில் கடனும், உதவித் தொகையும் வழங்குவதற்காக ரூ. 4,95,095 செலவிட ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

சேதமடைந்த மீன்பிடி படகுகளையும், கட்டுமரங்களையும், பருத்திநூல் வலைகளையும், நைலான் வலைகளையும் திரும்ப வாங்குவதற்காக அல்லது சீர்படுத்துவதற்காக நிதி உதவி வழங்கப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 4,600 மீனவர் குடும்பங்களுக்கும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 500 குடும்பங்களுக்கும், ஒரே குடும்பத்திற்கு ரூ. 50 வீதம் ரொக்க மானியம் அளிப்பதற்காக ரூ. 2,55,000 தொகைக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த படகுகளையும், வலைகளையும் மீன்பிடிப்பதற்கு உடனடியாகப் பயன்படுத்த இயலாத குடும்பங்களுக்கு மட்டுமே இந்த ரொக்க மானியம் வழங்கப்படும்.

#### உடைப்பெடுத்த ஏரி--கால்வாய்கள்

இராமநாதபுரம் மாவட்டத்தில் 624 ஏரிகளும், தஞ்சாவூர் மாவட்டத்தில்ல் 324 ஏரிகளும் உடைப்பெடுத்துவிட்டன.

ஏரிகள், ஆறுகள், கால்வாய்களின் உடைப்புகளை உடனடியாக அடைப்பதற்காக தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ரூ. 5 இலட்சமும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 10 இலட்சமும் வழங்குவதற்கான செயற்குறிப்பும், பாசன ஏரிகளை முறையாகப் பழுது பார்ப்பதற்காக தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ரூ. 26,50,000-மும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 70,00,000-மும் வழங்குவதற்கான செயற்குறிப்பும் அரசாங்கத்தின் பொதுப் பணித் துறையின் ஆலோசனையில் உள்ளது; இச்செலவிற்கான சரியான மதிப்பீடு, தலைமைப் பொறியாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

#### சேதமடைந்த சாலைகள் பழுதுபார்ப்பு

இராமநாதபுர மாவட்டத்தில் சேதமடைந்த மாநில நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த சாலைகளைத் திரும்பப் போடுவதற்காக அரசாங்கத்தின் ஒப்புதலை எதிர்பார்த்து நெடுஞ்சாலைத் தலைமைப் பொறியாளர் ரூ. 9 இலட்சம் அளவில் ஒப்பளிப்பு வழங்குகிறார்.

நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த சேதமடைந்த சாலைகளைப் பழுதுபார்ப்பதற்கென ரூ 20 இலட்சம் ஒதுக்குவதற்கான செயற்குறிப்பு அரசாங்க ஆலோசனையில் உள்ளது.

#### ஊராட்சி ஒன்றியச் சாலைகள்

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும், ஊராட்சிச் சாலைகளையும் பழுது பார்ப்பதற்காகத் தலைமைப் பொறியாளரின் விரிவான அறிக்கை வரப்பெற்றதும் நடப்பு ஆண்டில் ரூ. 1-இலட்சம் ஒதுக்குவதென்றும், இதேபோல தனி மானியம் அடுத்த ஆண்டிற்கும் ஒதுக்குவதென்றும் முடிவெடுக்கப் பெற்றுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் செயற் குறிப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இந்த அரசின் சிர்கேடான நிதி வழிவகைகளின் காரணமாக, இடர்த் தணிப்பு வேலைகளுக்குத் தொடர்பான செலவினை மேற்கொள்ளும்பொருட்டு மானியமாக ரூ 36.74 இலட்சமும், கடனாக ரூ. 159.74 இலட்சமும் அளிக்கும்படி இந்திய அரசினை வேண்டியுள்ளோம். இந்திய அரசு ரூ. 250 இலட்சம் கடனுக்கு மட்டுமே ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மேற்கொண்டும் நிதியுதவி வழங்குமாறு இந்திய அரசினை வற்புறுத்தியுள்ளோம்."

# 1950 ல் செய்துவிட்ட பெருந் தவறு!

## உடன்பிறந்த மக்கள்மீதே ஆதிக்கம் செலுத்தும் மனப்போக்கு!

## வெறும் சட்டத்தினுல் ஒற்றுமையை உருவாக்கிட முடியாது?

### நாடாளுமன்றத்தில் பேராசிரியர் க. அன்பழகன் எச்சரிக்கை

நாடாளுமன்ற மக்களவையில், தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், குடியரசுத் தலைவர் உரை மீது நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு ஆற்றிய உரையின் ஒரு பகுதி ஏற்கனவே வெளியாகியுள்ளது; அதன் மற்றொரு பகுதி இங்கு தரப்படுகிறது:—

### மாபெரும் குற்றம்— மாற்றியாக வேண்டும்

இந்தி அறிமுகம் செய்யப்பட்ட நாள் முதலாய்—1937-ம் ஆண்டு தொடங்கியே தென்னக மக்கள் அதை எதிர்க்கிறபோது, அதனைத் திணிப்பதால் ஏற்பட்ட விளைவுகளை, தனியாக வேறு சொல்லவேண்டும்?

மகாத்மா காந்தியைப் பற்றித் தாம் எழுதிய பெரும் புகழ் பெற்ற நூலில், பியாரிலால், இராஜாஜி பற்றி காந்தி சொன்னதாகக் குறிப்பிடும் வரிகள் இவை:—

"இந்தி தேசிய மொழி ஆவதை (நமக்கு ஒரு தேசிய கீதம் இருப்பதுபோல்—ஒரு தேசியக் கொடி இருப்பது போல்—ஒரு குறியீட்டு மொழியாக) இராஜாஜி ஒப்புக்கொள்ளக்கூடும்; ஆனால், இந்தி மட்டுமே ஆட்சிமொழித் தகுதியைப் பெற அவர் என்றைக்கும் இசையவே மாட்டார்.''

இராஜாஜியின் மனப்போக்கைக் குறிப்பிட்டார் காந்தி என்றால்—'இராஜாஜி போன்ற எண்ணற்ற தென்னகத்து மக்களின் மனப்போக்கைக் குறிப்பிட்டார்' என்று அர்த்தம்!

தென்னக மக்கள், 'இந்தி மட்டுமே ஆட்சிமொழி' ஆவதை என்றுமே ஒப்பமாட்டார்கள் என்பதைக் காந்தியார் நன்குகப் புரிந்துகொண்டிருந்தார்.

ஒரு பகுதி மக்கள் மற்றொரு பகுதிகளில் தடையின்றி சென்று தொடர்புகொள்ள வேண்டுமானால், 'தேசிய மொழி' என்ற அளவில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கலாம்; ஆனால் அதை 'ஆட்சி மொழி' என்று ஆக்குவது மாபெரும் குற்றமாகும். இந்தக் குற்றம், 1950-ல் இழைக்கப்பட்டுவிட்டது; இப்போதாவது அதை மாற்றியாக வேண்டும்.

விளைவுகளைக் கருதாமல் விரும்பாத மக்கள்மீது, 'எப்படியும் இந்தியைத் திணித்தே ஆக வேண்டும்' என்ற முனைப்பு இந்தி ஆர்வலர்களுக்கு அதிகமாக ஆக—பாரம்பரியமான இந்தி எதிர்ப்பு உணர்ச்சி, அளவிலும் வகையிலும் வேகத்திலும் வளர்ந்து வருகிறது! அதனால்தான் இந்தி எதிர்ப்பு அங்கே அணையவில்லை!

வடக்கே உள்ளவர்கள், மக்களின் மனப்போக்கில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்களைக் கருத்தில் கொள்ளாமல் இன்னம் பழைய பாணியிலேயே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்!

### பொருள் என்ன இதற்கு?

இந்தி, ஆட்சிமொழியின் இடத்தைப் பிடித்துக்கொண்டிருப்பதால் இந்திக்காரர்களின் நிலை என்ன? இராஜஸ்தான் பல்கலைக்கழகத்துக் கருத்தரங்கு ஒன்றில் பேராசிரியர் மைரோன் வீனர் அளித்த ஆராய்ச்சி உரையில் கூறியிருப்பதை மேற்கோள் காட்ட விரும்புகிறேன்:—

"கலாச்சார அரசியல் முறைகளால் நாட்டின் பகுதிகளை அடிமை கொள்ளும் வகையில் இந்தி பேசும் பகுதி, 'இந்தியாவின் பிரஷ்யா'வாகத் தன்னைக் கருதிக்கொள்வதாக ஓர் அச்சம் நிலவுகிறது.''

இதற்குப் பொருள் என்ன? 'அரசியல் கலாசார ஆதிக்கங்களின் ஈர்ப்பு, மையம் இந்திப் பகுதியின் பிடிப்பில் இருக்கிறது' என்பதுதானே!

தொடர்ந்து மூன்று தலைமை அமைச்சர்களும் உத்தரப்பிரதேசத்துக்காரர்களாக இருப்பதிலிருந்தே, இந்திப் பிரதேசத்தின் கரு மையமான உத்தரப்பிரதேசம், அரசியலில் எவ்வளவு ஆதிக்கம் செலுத்துகிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம்!

காரணங்கள் என்னவாயினும்—விளக்கங்கள் எவ்வளவு தரப்பட்டாலும்—மூன்றுதலைமையமைச்சர்களும் உத்தரப் பிரதேசத்துக்காரர்கள் என்பது உண்மைதானே!

இப்பகுதிக்குச் செல்வாக்கு வளர்ந்திருப்பது, அந்தப் பகுதியில் படித்தவர்கள் அதிகம் உள்ளார்கள் என்பதாலே அல்ல—அறிவாளர்கள் உருவாவதே அங்கே இருந்துதான் என்பதாலே அல்ல—'இந்தி ஆட்சி மொழியாக இருக்கிறது' என்பதாலே மட்டுந்தான்!

### வடநாட்டு ஆதிக்கம் அதிகமாகி விட்டது!

இன்னமொன்று சொல்ல விரும்புகிறேன்; டில்லி, இந்தியாவின் தலைநகரம்; அது, நாட்டின் வட கோடியில் அமைந்திருக்கிறது; மத்திய அரசு, நாட்டின் மத்தியில் இல்லை. என் பகுதியில் இருந்து டில்லிக்கு இருக்கிற தொலைவை நான்பொருட்படுத்தவில்லை; ஆனால் மத்திய அரசு வட இந்தியாவில் அமைந்திருப்பதால், வடநாட்டின் ஆதிக்கம் நாட்டில் அதிகமாக இருக்கிறது.

அதோடு, ஒரு வடநாட்டு மொழி மட்டுமே ஒரே ஆட்சிமொழி என்று ஒப்புக்கொள்ளப்படுகிற நிலையில், வடநாட்டின் ஆதிக்கம் இன்னம் அதிகம் ஆகிவிட்டது!

இந்திக்காரர்கள், தாங்கள் மட்டுமே இந்த நாட்டின் எசமானர்கள் என்றும், மற்றவர்கள் தங்கள் விருப்பப்படி ஆடவேண்டிய இரண்டாந்தரக் குடிமக்கள் என்றும் கருதுவதற்கு இந்தக் காரணங்கள் போதாவா? இந்தி பேசாத தங்கள் உடன்பிறந்தாரின் தொல்லைகளை—இடர்ப்பாடுகளைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இந்திக்காரர்கள் இருக்கிறார்கள்; இது, நாட்டின் சனநாயக மரபு வளர்ச்சிக்கு ஏற்றதாக இல்லை!

### மற்ற மொழியினரை மட்டந்தட்டுவதா?

இன்றைய சனநாயக அமைப்பில் நாட்டின் அரசியல் ஒற்றுமை காப்பாற்றப்பட வேண்டுமானால், மொழிப் பிரச்சினையைப் பரந்த கண்ணோட்டத்துடன் ஆராய வேண்டும். தமிழரோ தெலுங்கரோ—'நாட்டின் மொத்த மக்கள் தொகையின் எண்ணிக்கையில் ஒரு பகுதியினர்' என்ற முறையில் கருதக்கூடாது.

ஒவ்வொரு மொழி பேசும் பகுதியும், ஒவ்வொரு மொழியினரும் தனித்தனிக் குழுவினராகக் கருதப்பட்டு, அவர்கள் சரிசமமாக மதிக்கப்படும் அளவில் பிரச்சினையை ஆராய வேண்டும்.

எந்த ஒரு மொழியினரும், மற்ற மொழியினரை மட்டந்தட்டும் வகையில் தங்கள் மொழியை மட்டுமே ஆட்சி மொழி என்று கருதிக்கொள்ளும் நிலை ஏற்படக்கூடாது. இதற்கு, இந்தி ஆட்சி மொழியாக ஆக்கப்படுவதற்கு முன் இருந்தபடியே, ஆங்கிலத்தை ஆட்சி மொழி ஆக்குவதே வழி; அல்லது, அந்தந்த மாநிலங்களில் மாநில ஆட்சி மொழிகளாக அரசியல் சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழிகள் அனைத்தையும் ஆட்சி மொழிகளாக்குவதே வழி!

ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக நீடிப்பதில் பொருத்தமான தடை ஏதும் யாரும் கூற முடியாது.

1962-ல் இளைஞர் காங்கிரசின் அனைத்திந்திய மாநாட்டில் காலஞ்சென்ற மதிப்புக்குரிய லால்பகதூர் சாஸ்திரி கூறிய கருத்தை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்:—

"ஆங்கிலம் எல்லா மாநிலங்களுக்கும் பொது மொழியாகவே இருக்கிறது; மாநில அரசுகளுக்குள்ளேயும், மத்திய-மாநில அரசுகளுக்கிடையேயும் தொடர்பு மொழியாகவும் இருக்கிறது; அத்தகைய ஆங்கிலம் கைவிடப்படுமானால், இந்தியா பல பிரிவுகளாகிச் சிதைவுறும்; ஆகவே மொழிப் பிரச்சினையை நாட்டின் ஒற்றுமையை மனத்தில் கொண்டு ஆராய வேண்டும்.''

ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதா கொண்டுவந்தபோது உள்துறையமைச்சர் சவாண் அவர்களோ, தலைமையமைச்சரோ இந்த நோக்கத்தோடு பிரச்சினையை அணுகியதாகத் தெரியவில்லை!

நாட்டின் ஒற்றுமை இன்னம் முழுமைஅடையவில்லை!

வெறும் சட்டத்தினாலே மட்டும் நாட்டில் ஒற்றுமையை உருவாக்கிவிட முடியாது!

மக்கள் அனைவரும் தாங்கள் உடன் பிறந்தவர்கள்போல எண்ணவேண்டும்; தாங்கள் அனைவரும் ஒரே நாட்டவர் என்று உணரவேண்டும். மக்களின் மனத்தில் சமத்துவ—சகோதரத்துவ உணர்வுகள் ஏற்படுவது ஒன்றுதான் ஒற்றுமைக்கு வழியாகும்.''

இந்தச் சந்தர்ப்பத்தில் திரு. அன்பழகன் அவர்கள், தமிழக அரசு தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தைப் பற்றி மிக விளக்கமாக உரையாற்றினார்கள்; அது, காங்கிரசுக் கட்சியினரால் எதிர்க்கப்படவில்லை என்பதையும், சுதந்த்ரா—முஸ்லிம் லீக்—தமிழரசுக் கழகங்களின் முழு ஒத்துழைப்பு அதற்கு இருந்தது என்பதையும் சுட்டிக்காட்டினார்கள்.

"இந்த நிலையில், மொழிப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் முறையில் குடியரசுத் தலைவரின் உரையில் ஏதும் இல்லாதது வருந்தத்தக்கது.

குடியரசுத் தலைவர், "மொழிப் பிரச்சினையை, புரிந்துகொள்ளும் மனப்போக்குடனும், விட்டுக்கொடுக்கும் எண்ணத்துடனும் அணுக வேண்டும்'' என்று மட்டும் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் சொல்லுகிற, விட்டுக் கொடுத்தலும் புரிந்துகொள்ளலும், 'இந்தியை மற்ற அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்ற முறையில்தான் இருக்கிறது!''

---

## அரசு ஊழியர் ஓய்வுபெறும் வயது

### மாற்றும் யோசனை இல்லை

சென்னை, மார்ச் 16—"மாநில அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் வயதை 50 என நிர்ணயிப்பதுபற்றிய யோசனை இல்லை''

என, சட்டமன்றத்தில், முதலமைச்சர் அண்ணா அவர்கள், கழக உறுப்பினர் ஏ. எம். இராஜாவின் கேள்விக்குப் பதிலளித்தார்.

துணைக் கேள்விகளுக்கு அண்ணா அவர்கம் மேலும் தெரிவித்ததாவது:—

"சில குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே தேவையை முன்னிட்டு 55 வயதுக்கு மேலும், வேலையில் நீடிக்கச் சிலருக்கு அனுமதியளிக்கப்படுகிறது; ஆனால், இதைப் பொது விதியாக்காதிருக்க இந்த அரசு பார்த்துக்கொள்ளும்.

"பொறியியல் வல்லுநர் போன்றவர்களின் பணியைப் பயன்படுத்திக் கொள்வதுபற்றி அரசு யோசிக்கும்.

"ஓய்வுபெறும்வயதை 55-லிருந்து 58 ஆக ஆக்குவது நீதித் துறையிலிருந்துதான்ஆரம்பமாயிற்று.

"தனியார் பள்ளியாசிரியர்கள் 60 வயதிலும், அரசினர் பள்ளியாசிரியர்கள் 58 வயதிலும் ஓய்வு பெறுவதை ஒரே சீராக்க உரிய நேரத்தில் உரிய முறையில் யோசிக்கப்படும்.''

---

## முதலமைச்சரின் தலைமைச் செயலாளராகிறார் செய்தி நிருபர்!

கேரளக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினரும் 'தேசாபிமானி' நாளிதழின் திருவனந்தபுரம் நிருபருமான கே. மோகனன், கேரள முதலமைச்சரின் தனிச் செயலாளராக நியமனம் பெற்றிருக்கிறார்!

ஏற்கனவே இருந்த உதவியாளர் சுப்பிரமணிய மேனன், மாநிலங்களவைக்கு கம்யூனிஸ்டுக் கட்சி வேட்பாளராக நியமனம் ஆகியிருப்பதனையடுத்து இந்த மாற்றம் நடந்திருக்கிறது!

---

## காங்கிரசு ஏட்டுக்கு எச்சரிக்கை

### சட்டமன்ற உரிமைப் பிரச்சினையில் தீர்ப்பு

சென்னை, மார்ச் 16—மதுரையிலிருந்து வெளிவரும் 'சிலம்பொலி' என்னும் ஏட்டின் மீது கழக உறுப்பினர் ந. தர்மலிங்கம் கொண்டுவந்திருந்த உரிமைப் பிரச்சினையின்மீது சட்டமன்றத்தில் துணை அவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் தீர்ப்பளித்தார்.

அந்த ஏடு, 'சட்டசபையா? சந்தைக் கடையா?' என்றும், 'சட்டசபை உறுப்பினர்கள் தூங்குகிறார்களா?' என்றும் அந்த ஏட்டில் குறிப்பிட்டிருப்பது சட்டமன்ற உரிமையைப் பாதிப்பதாக திரு. தர்மலிங்கம் குறிப்பிட்டிருந்தார்.

இதுபற்றி, அவை முதல்வர் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கருத்தறிவிக்கையில், இந்த ஏட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்து, அவையினர் உரிமையையும் மதிப்பையும் பாதிப்பதாக இருந்த போதிலும், அதை அவ்வளவாகப் பொருட்படுத்தாமல் எச்சரிக்கை செய்து விட்டுவிடலாம் என்றார்.

அந்த ஏட்டில், தாம் அவையில் கூறிய செய்திக்கு மாறாகச் செய்தி வெளியிட்டிருப்பது பற்றியும் விளக்கினார். மதுரைச் சம்பவத்தையொட்டி இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாகத்தான் தாம் அறிவித்ததாகவும், ஆனால் அந்த ஏட்டில், கைது செய்யப்பட்டிருப்பதாகத் தாம் அறிவித்ததாகவும், அதன்படி யாரும் கைது செய்யப்பட்டிருக்கவில்லை என்றும் தவறான செய்தி அடிப்படையில் எழுதப்பட்டிருப்பதாகவும் கூறி அமைச்சர் மறுப்பு விளக்கமளித்தார்.

துணை அவைத் தலைவர் தமது தீர்ப்பில், மேலெழுந்தவாரியாகப் பாத்தாலும் அந்தப் பத்திரிகையில் எழுதியிருப்பது மன்றத்தைப் பாதிப்பதுதான் என்றாலும், அந்தப் பத்திரிகை அவ்வளவாக விளம்பரம் இல்லாத பத்திரிகையாகையால், அவை முதல்வரின் கருத்துரைக்கேற்ப எச்சரிக்கை செய்து இப்பிரச்சினையை இத்துடன் விட்டுவிடுவதாக அறிவித்தார்.

---

## இரயிலில் கள்ளப் பயணம் அதிகரிப்பு

இந்திய இரயில்வேக்களில் டிக்கெட் பரிசோதனையைத் தீவிரமாக்கியதை அடுத்து சென்ற டிசம்பர் மாதத்தில் டிக்கெட் இல்லாமலோ அல்லது சரியான டிக்கெட்டுகள் இன்றியோ பயணம் செய்த 7,84,849 பயணிகள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

1966 டிசம்பரில் இத்தகைய பயணிகள் கண்டுபிடிக்கப்பட்டதைவிட இது ஏழு சதவிகிதம் அதிகமாகும்; அப்பொழுது 7,33,846 பேர் டிக்கெட் இல்லாமல் பயணம் செய்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

சரியான டிக்கெட் இல்லாமலும் சரக்குக் கட்டணம் செலுத்தாமல் சரக்குகளை எடுத்துக்கொண்டும் பயணம் செய்த பிரயாணிகளிடமிருந்து சென்ற டிசம்பரில் ரூ. 26,69,599 வசூலிக்கப்பட்டது. 1966 டிசம்பரில் ரூ. 22,88,240 வசூலிக்கப்பட்டது.

---

## நகராட்சி மன்றத்தில் காங்கிரசாரின் தரக்குறைவான செயல்

### ஆணையரை இழித்துப் பேசித் தாக்கவும் முயற்சி

### கழகத் தோழர்களையும் ஒழித்துக்கட்டுவதாக மிரட்டல்

5—3—68 மாலை 5 மணிக்கு நடைபெற்ற சிவகாசி நகராட்சி மன்றக் கூட்டத்தில், தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட 'எலெக்ட்ரிஷியன்' வேலையை மேலும் ஓராண்டிற்கு நீடிக்க மன்றத்தின் அனுமதியைக் கோரும் பிரச்சினை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டபோது, காங்கிரசு உறுப்பினர் சந்திரசேகரன், 'தற்போதுள்ள நகராட்சி ஆணையர், தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சலுகை காட்டுகிறார்' என்று குறிப்பிட்டுத் தரக்குறைவாகப் பேசினார்.

அவரைத் தொடர்ந்து நகராட்சித் துணைத் தலைவர் கே.ஏ.ஏ. அருணாசல (நாடார்) என்பவரும், ஆணையாளரைத் தரக் குறைவாகப் பேசியதுடன், தாக்கவும் முயன்றார்.

அதுபோது, கழக உறுப்பினர் திரு. என். பி. ஏ. எஸ். பெரியண்ணன் தலையிட்டு, நகராட்சி மன்றத்தின் மதிப்பைக் காப்பாற்றும்படிக் கேட்டுக்கொண்டு, தரக்குறைவாகப் பேசிய இருவரின் போக்கையும் கண்டித்தார்.

இதைத் தொடர்ந்து நகராட்சி மன்றத் தலைவர் என்.பி.எஸ்.எஸ். இரத்தின (நாடார்), துணைத் தலைவர் கே.ஏ.ஏ. அருணாசல(நாடார்), காங்கிரசுக் கட்சி உறுப்பினர் கே.ஏ.பி.ஏ. சந்திரசேகரன் ஆகிய மூவரும் சேர்ந்து என்.பி ஏ.எஸ். பெரியணன் அவர்களையும் ஆணையா எஸ். முத்தராஜ் அவர்களையும் கீழ்த்தரமாகவும், வெறித்தனமாகவும திட்டி, தாக்கவும் முயன்றனர்; இதனால் நகராட்சிக் கூட்டம் பாதியில் நிறுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து உறுப்பினர்கள் வெளியே வரும்போது நடு வீதியில் அருணாசல (நாடார்), என்.பி ஏ.எஸ். பெரியணன் அவர்களைப் பார்த்து 'உன்னையும் உன்னைச் சார்ந்த கழகத் தோழர்களையும் ஒழித்துக்கட்டுகிறேன்' என்று கூறிக் கூச்சலிட்டார்.

"இதனால் நகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது'' என்று நகர தி.மு.க. செயலாளர் ஏ. துரைக்கண்ணன் அறிவிக்கிறார்.

# முறையீடுகளை ஆராய உயர்மட்ட குழு

## குறைகளைக் களைந்தெறிய அரசு ஆவனசெய்யும்

### பஸ் தொழிலாளருக்கு அமைச்சர் கருணாநிதி உறுதிமொழி

சென்னை, மார்ச் 16—

"தமிழக அரசு, போக்குவரத்துத்துறைத் தொழிலாளர்களின் குறைபாடுகளை — முறையீடுகளைக் கவனத்தில்கொண்டு அவைகளைக் களைந்தெறிவதில் முழுக் கவனம் செலுத்தி வருகிறது!

"இந்த அரசு தொழிலாளர்களுடைய அரசு; தொழிலாளர்களின் நலனுக்காக இயங்கிவரும் அரசு; அவர்களுடைய குறைகளைக் களைந்தெறிவதென்ற உறுதியுடன் பாடுபடுகின்ற அரசு!

"பிரச்சினைகளைத் தீர்ப்பதில், முதலாளித்துவ மனப்பான்மையுடன் இந்த அரசு தொழிலாளர்களை அணுகாது; கடந்த ஓராண்டுக் காலத்தில் அரசுப் போக்குவரத்துத் துறையினரின் 25 கோரிக்கைகளை நல்ல முறையிலே செய்து முடித்திருக்கிறது என்பதே இதற்குச் சான்று!

"பஸ் போக்குவரத்துத் தொழிலாளர்களின் இன்றைய ஊதியம், கிராக்கிப் படி, வாய்ப்பு வசதிகள் ஆகியவற்றை அவர்களை ஊக்கப்படுத்தும் அளவில் சீர்படுத்த – அரசுப் போக்குவரத்துத் துறையில் இன்றுள்ள இழப்புக்களைத் தவிர்த்து – இத்துறையில் அரசினர் செய்துள்ள முதலீட்டுக்கு ஏற்ற வகையில் முன்னேற்றம் காண்பதற்கான கூறுகளை ஆய்வுசெய்து சிபாரிசுகள் செய்ய ஓர் உயர்மட்டக் குழுவை அரசு நியமிக்கும்; தொழிலாளர்களின் கோரிக்கைக்கு இணங்கவே இக்குழு அமைக்கப்படுகிறது.

"பஸ் போக்குவரத்துத் துறையில் இலாபம்கூட வரவேண்டாம்—நட்டம் இல்லாமல் இருந்தாலே போதுமானதாகும்; இப்பொழுது தரப்பட்டுள்ள பத்துக் காசு உயர்வு போதுமானது எனச் சொல்லவில்லை—அடையாளமாகத்தான் தரப்பட்டிருக்கிறது; இந்த உயர்மட்டக் குழுவின் சிபாரிசுகளுக்கிணங்க ஊதியம், கிராக்கிப் படி உயர்வுகளைத் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது; ஆகவே, இந்த உறுதிமொழியை ஏற்று—மனநிறைவு பெற்று—தொழிலாளர் தரப்பில் தரப்பட்டுள்ள வேலைநிறுத்த 'முன்னறிவிப்பை'த் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்"

இவ்வாறு சட்டமன்றத்தில், போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில்—வேலை நிறுத்தம் செய்யப் போவதாகத் தரப்பட்டுள்ள 'முன்னறிவிப்பு'ப் பற்றிக் குறிப்பிடுகையில்—அமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

## சென்ற ஆண்டில் 22 இலட்சம் பேர்

புதுடில்லி, மார்ச் 16—

மாநில அரசுகளிடமிருந்து கிடைத்துள்ள தகவல்களின்படி சென்ற ஆண்டு இறுதிவரையில் சுமார் 22 இலட்சம் பேர்களுக்கு 'லூப்' (கருத்தடை வளையம்) பொருத்தப்பட்டிருக்கிறது.

'லூப்' பொருத்தப்படுவதற்கு முன்னரும், அதற்குப் பின்னரும் தகுந்த மருத்துவப் பரிசோதனை இருக்க வேண்டும் என்றும், அதற்காக அரசாங்கங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மத்திய சுகாதார—குடும்பக் கட்டுப்பாட்டுத் துறை, மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

1966—67-ல் சுமார் 9 இலட்சம் பேர்களுக்கு 'லூப்' பொருத்தப்பட்டது.

# தமிழக அரசுப் போக்குவரத்தின் ஓராண்டுச் சாதனை

## நாட்டுடைமையாக்கும் கொள்கை — தி. மு. க. ஆட்சி பெற்றுவரும் வெற்றி

சென்னை, மார்ச் 16—

சட்டமன்றத்தில் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், மானியக் கோரிக்கையை முன்வைத்து ஆற்றிய குறிப்புரையில், அரசுப் போக்குவரத்தின் ஓராண்டுச் சாதனையையும், நாட்டுடைமையாக்கும் அரசின் கொள்கை பெற்றுள்ள வெற்றியையும் விளக்கிக் குறிப்பிட்டதாவது :—

நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழ்நாடு அரசாங்கத்தின் பயணிகள் பேருந்துப் போக்குவரத்துப் பணி 1967-ல் தனது 21-வது ஆண்டினை எய்தியுள்ளது.

அரசாங்கம் மேற்கொண்டு நடத்தும் ஒரு வணிக நிறுவனத்தின் திறமை, முதற்கண் பொதுமக்களுக்கு அது ஆற்றும் பணியைக் கொண்டும் இரண்டாவதாக, அந்நிறுவனத்தின் நிதி நிலையைக் கொண்டும் பெரும்பாலும் முடிவு செய்யப்படுகிறது.

1967—68-ம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் பற்றியும் 1967—68-ம் ஆண்டின் இறுதியில் இந்த நிறுவனம் ஆற்றுமென எதிர்பார்க்கப்பட்ட போக்குவரத்துப் பணியின் அளவையும் காட்டும் புள்ளிவிவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | சென்னைக் கிளை | | தொலைப் போக்குவரத்து | |
|---|---|---|---|---|
| | 1967 மார்ச் 31 | 68 மார் 31 | 67 மார் 31 | 68 மார் 31 |
| பேருந்துகளின் எண்ணிக்கை | 1026 | 1327 | 174 | 188 |
| பேருந்துகளின் பணி எண்ணிக்கை | 861 | 1120 | 129 | 146 |
| வழித்தடங்களின் எண்ணிக்கை | 185 | 370 | 46 | 55 |
| வழித்தடங்கள் மொத்தநீளம் (மைல்) | 2012 | 17600 | 9547 | 11340 |
| பயணத் தடவைகள் அல்லது ஒற்றைப் பயணங்கள் | 16743 | 21780 | 154 | 171 |
| அன்றாடப் பயண மைல் கணக்கு | 122299 | 161300 | 31618 | 35000 |
| அன்றாடச் சராசரி வசூல் (ரூபாயில்) | 150000 | 250000 | 46000 | 52000 |
| அன்றாடப் பயணம் செய்த பயணிகளின் சராசரி எண்ணிக்கை | 850000 | 900000 | 23000 | 23700 |

(1968-ம் ஆண்டு மார்ச் விவரம் எதிர்பார்க்கப்படுவது)

பேருந்துப் போக்குவரத்துப் பிரிவின் இயங்கு திறனை மேம்படுத்தவும் பொதுமக்களுக்கு அது ஆற்றும் பணியை மேலும் சிறக்கச் செய்யவும் நடவடிக்கைகள் இடைவிடாது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இத்துறையின் நிதி நிலை விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| | மொத்த வருவாய் | மொத்தச் செலவு | நிகர வருவாய் | பல்வேறு வசதிகட்கு ஒதுக்கப்பட்டது | நிகர ஆதாவம் |
|---|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சக்கணக்கில்) | | | | |
| 1966—67 | 968.15 | 896.55 | 71.60 | 132.60 | (—)61.00 |
| 1967—68 (எதிர்பார்க்கப்படுவது) | 1147.73 | 1039.72 | 108.01 | 145.36 | (—)37.35 |

### படிப்படியாக நாட்டுடைமை

தமிழக அரசு, பயணிகள் பேருந்து போக்குவரத்தைப் படிப்படியாக நாட்டுடைமையாக்குவது என்று எடுத்துள்ள முடிவின்படி, 1—8—67-முதல் 12—3—68-வரை மேற்கொள்ளப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை வருமாறு :—

| மாவட்டம் | பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|
| செங்கற்பட்டு | 111 |
| தென் ஆற்காடு | 3 |
| வட ஆற்காடு | 2 |
| தர்மபுரி | 18 |
| சேலம் | 9 |
| கோயம்புத்தூர் | 13 |
| நீலகிரி | 4 |
| திருச்சிராப்பள்ளி | 12 |
| இராமநாதபுரம் | 6 |
| மதுரை | 10 |
| கன்னியாகுமரி | 34 |
| மாநிலப் போக்குவரத்து அதிகாரியின் அனுமதியின்பேரில் ஓட்டப்படுபவை | 14 |
| மொத்தம் | 236 |

### விரைவுப் பேருந்துகளில் கட்டணக் குறைப்பு

விரைவுப் பேருந்துகளில் மைலுக்கு 6-காசாக இருந்ததை இவ்வரசு பொறுப்பேற்றபின்னர் 5-காசாகக் குறைத்ததனால் வருமானம் குறைபவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1966—67-ல் பயணக் கட்டணம் 6-காசாக இருந்தபோது ரூ 46,000 மட்டுமே நாள் வருமானமாக இருந்தது; அந்த நிலை மாறி, 1967—68 இறுதியில் சராசரி நாள் வருமானம் ரூ. 52,000-ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பயணக் கட்டணத்தைக் குறைத்ததன் பயனாகப் பயணிகளின் எண்ணிக்கை பெருகியுள்ளது.

### விருப்பம்போல பயணம்செய்யும் பயணச் சீட்டு முறை

பேருந்துப் பயணிகளுக்கு மேலும் வசதியும் வாய்ப்பும் அளிக்கும் நோக்கத்துடன் ஞாயிற்றுக்கிழமைகளிலும், ஏனைய விடுமுறை நாட்களிலும் அவரவர் விருப்பம்போல் பயணம் செய்யும் பயணச் சீட்டு முறை அமுலாக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒருவர் ரூ. 1 50-ச்குப் பயணச் சீட்டு வாங்குவதன்மூலம் அவர் மாநகர் பேருந்துகளில் எங்கு வேண்டுமானாலும் எத்தனை முறை வேண்டுமானாலும் அந்த நாள் முழுவதும் பயணம் செய்யலாம்.

### பார்வை இழந்தோர்க்கு சலுகை

பார்வையிழந்தோர்களுக்கும், உடல் ஊனமுற்றோர்களுக்கும் சலுகை அளிக்க இந்த அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இது, மனிதாபிமானத்தின் அடிப்படையில் எடுத்த முடிவு. அதன்படி அவர்கள் சிகிச்சை பெற்றுவரும் காலம் முழுவதும் அரசாங்கப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யலாம்.

சென்னை நகரிலும் நீண்ட தூர வழித்தடங்களிலும் பயணம் செய்யும் மக்களுக்குப் போதிய வசதிகள் செய்து தரவேண்டும் என்ற நோக்குடன் 494 வண்டிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

### வல்லுநர் குழு

பேருந்து இயக்கச் செலவினங்களை இயன்றவரை குறைக்கும் பொருட்டு அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தேவைக்கு வேண்டிய அளவுக்கு மட்டும் பொருட்களை வாங்குவது—அவற்றைக் கணக்கெடுப்பது, நல்ல வகையில் பயன்படுத்துவது இவைகளின் மூலம் செலவை கணிசமாகக் குறைக்கமுடியும்.

இதை நன்கு ஆராய்ந்து அரசாங்கத்திற்கு ஆலோசனை கூற வல்லுநர் குழு ஒன்றை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்குழு விரைவில் செயல்படும்.

# அரசுப் போக்குவரத்தில் இழப்பு ஏற்படுவது ஏன்?

## சட்டமன்றத்தில் அமைச்சர் விளக்கம்

சென்னை, மார்ச் 15—

சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் திரு. எஸ். கே. இராமசாமி கேட்ட கேள்வியொன்றுக்குப் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் அளித்த எழுத்துமூல பதிலில் பின்வருமாறு விளக்கப்பட்டிருக்கிறது :—

1962-63 முதல் 1965-66 வரையுள்ள கால அளவில் தமிழ்நாடு அரசாங்கப் பேருந்துப் போக்குவரத்தின் சென்னை மாநகரப் போக்குவரத்தில் இழப்பு ஏற்பட்டது. 1964-65-ல் ரூ. 23.88 இலட்சம் இழப்பு ஏற்பட்டிருக்க 1965-66-ல் ரூ 33.91 இலட்சம் இழப்பு ஏற்பட்டது.

இழப்பு ஏற்பட்டதற்கான காரணங்கள், செலவுகளைச் சிக்கனப்படுத்த அத்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

பேருந்து ஒன்றை வழித்தடத்தில் ஓடவிடுவது கட்டுபடியாக வேண்டுமானால், செல்லவேண்டிய குறைந்த அளவு தொலைவுப் பயணத்துக்கென அதை இயங்கப் பிடிக்கும் மாறுபடும் செலவுகளையும் நிலையான செலவுகளையும் சரிக்கட்டிக் கொண்டு போகிற வகையில் அப்பேருந்து குறிப்பிட்ட குறைந்த அளவு மைல்கள் பயணம் செய்திருக்க வேண்டும்.

தற்போதைய வரவுகள்—செலவுகளின் அடிப்படையில், சென்னை மாநகரில் ஒரு பேருந்தை ஓட்டுவது கட்டுப்படியாக வேண்டுமானால், அது நாள் ஒன்றுக்குக் குறைந்தது 146 மைல் பயணம் செய்யவேண்டுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் பேருந்துகள் நாள் ஒன்றுக்குச் சராசரி 135 மைல் தான் ஓடுகின்றன. பேருந்துகளை இயக்குவது கட்டுப்படியாகிற அளவிற்கு அவை ஓடாவிட்டால், அவற்றை இயக்குவதன் மூலம் இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

கடினமான போக்குவரத்து நிலைமைகளாலும், 1965-ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் விதிகளின் வித்துறைகளின்படி செயல்பட வேண்டிவந்ததாலும், பேருந்துகள் ஓடும் தொலைவுகளை அதிகரிக்க இயலவில்லை.

சென்னை மாநகரில் சாலைகளைப் பயன்படுத்தும் வண்டிகளின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாக விரைவில் அதிகரித்து வந்துள்ளது வாடகைக் கார்கள், சரக்குப் பேருந்துகள் (lorries) தனியார் வண்டிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் போன்ற பலவகை வண்டிகள் சாலைகளில் ஓடிக்கொண்டிருக்கின்றன. சாலைகளில் ஓடும் வண்டிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால், சாலைகளில் போக்குவரத்து நெரிசல் மிகுந்துள்ளது. இதன் விளைவாக, போக்குவரத்துத் துறைப் பேருந்துகளின் வேகம், இருக்கக்கூடிய அளவைக் காட்டிலும் குறைவாகவே உள்ளது. பல இடங்களில் பல சமயங்களில் வலவர்கள் வண்டியை அடிக்கடி நிறுத்தி ஓட்டவேண்டியுள்ளது.

பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கையில், போக்குவரத்து ஒழுங்கிற்கான அடையாள அறிவிப்புகள் இடங்களில் வண்டிகளை நிறுத்த வேண்டியுள்ளது.

பேருந்துப் போக்குவரத்தை இயக்குவது குறித்து, இந்த இடர்ப்பாடுகளனைத்தும் மேலே குறிப்பிட்டுள்ள கடினமான போக்குவரத்து நிலைமைகள் ஆகும்.

### பயணங்கள் எண்ணிக்கை குறைவதற்குக் காரணம்?

பேருந்துப் பணியாளர்களுக்கு அவர்களது பணி நேரத்திலேயே ஓய்வு இடைவேளை விடுவதற்கு 1965-ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் விதிகள் வகைசெய்கின்றன. பேருந்துப் பணியாளர்களுக்கு ஓய்வு இடைவேளைகள் வழங்குவது அவசியமாயுள்ளதால், ஒரு பேருந்து செய்யும் பயணங்களின் எண்ணிக்கை குறைந்து போகிறது. தோராயமாக, ஒரு பேருந்து இயங்குகிற 18 மணி நேரத்தில் 2 மணி நேரம் பேருந்துப் பணியாளர்களுக்கான ஓய்வு இடைவேளை நேரமாக அமைகிறது. இந்த அவசியம் காரணமாக, உரிய அளவுத் தொலைவிற்கும் பேருந்துகளால் பயணம் செய்வது இயலாமற் போகின்றது.

1965—66-ல் சென்னை மாநகரில் ஒரு பேருந்து நாள் ஒன்றுக்கு 137 மைல் ஓடியது; 1966-67-ல் அது, நாள் ஒன்றுக்கு 137 மைல்களுக்குக் குறைவாக ஓடும் என்று தோன்றுகிறது.

மேற்கூறிய நிலைமைகளை நோக்குமிடத்து, அவற்றைச் சீர்செய்ய இத்துறையால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது என்பது புலனாகும்.

நெரிசல் நேரங்களில் போக்குவரத்தைச் சீர்படுத்துவதன் அவசியம் எல்லா நகரப் போக்குவரத்து நிறுவனங்களுக்கும் உள்ளது. நெசல் நேரங்களில் கூடுதல் பேருந்துகள் விட வேண்டியுள்ளது. நெரிசல் நேரங்களில் நெரிசலைக் குறைக்கத் தனிப் பேருந்துகள் விடப்படுகின்றன. மாணவர்களுக்கான தனிப் பேருந்துகளும் விடப்படுகின்றன. இந்தப் போக்குவரத்துகள் மூலம் உரிய அளவு ஆதாயம் கிடைப்பதில்லை. பொதுமக்களின் நலனைக் கருதியே இவற்றை நடத்தவேண்டியுள்ளது.

முழுவதும் ஆதாயங்களை எதிர்நோக்கியே புதிய வழித்தடங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. சென்னை மாநகரைச் சுற்

(4-ம் பக்கம் பார்க்க)

# நிலத்தைத் தரிசாகப் போட்டால் கடுந் தண்டனை

## காங்கிரசு உறுப்பினர் யோசனை — முதலமைச்சர் அண்ணா வரவேற்பு

சென்னை, மார்ச் 18—

"1961-ஆம் ஆண்டைய நிலப் பயன்பாட்டு ஆணையை முழு அளவில் கண்டிப்பாகப் பயன்படுத்துமாறு மாவட்ட ஆட்சியாளர்களுக்கு ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது"

என்று, வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி, இன்று சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

கே. விநாயகம்:— "1961 ஆம் ஆண்டிலேயே இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டும், 600 ஏக்கர் நிலந்தான் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதால் இந்த ஆணையினால் உரிய பலன் கிடைக்கவில்லை என்று தெரிகிறது; இந்த ஆணையைக் கடுமையாகச் செயல் படுத்தி, தரிசாக விட்டுவைத்திருக்கும் நிலங்களைக் கைப்பற்றவும், அப்படிப் பட்டவர்களைக் கடுமையாகத் தண்டிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?"

முதலமைச்சர் அண்ணா:—"நிலத்தைத் தரிசாக வைத்திருக்கும் நிலச்சொந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்து, கடுமையான தண்டனை அளிக்க வேண்டும் — என்று கூறும் இந்த யோசனை வரவேற்கத்தக்கது; இந்த யோசனையைக் கவனித்து தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்."

பாலசுப்பிரமணியம் (ச.சோ.):— "மேய்ச்சல் நிலம் என்ற பெயரால் நல்ல நிலங்களெல்லாம் பயிரிடப்படாமல் விடப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?"

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி:— "நிலச் சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது, முந்திய அரசு இதற்கு விதிவிலக்களித்துச் சட்டம் இயற்றியதால் இந்த நிலை ஏற்பட்டுவிட்டது. கால்நடைப் பண்ணை வைத்திருப்பவர்களுக்கு மேய்ச்சல் நிலம் வேண்டும் என்ற காரணம் காட்டி, அப்படிப்பட்ட நிலங்களுக்கு விதி விலக்குப் பெற்றுவருகிறார்கள்."

கேள்வி:— "தரிசாக உள்ள நிலங்களைப் பயிரிடப் பணவசதி இல்லாதவர்களுக்கு அரசு உதவி செய்யுமா?"

பதில்:—"நிலம் உள்ளவர்களுக்கு அரசு, இப்போதே பல வகைகளிலும், கடனாகவும் மானியமாகவும் உதவியளித்து வருகிறது."

# ஐ.ஏ.எஸ். அதிகாரிமீது இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

## சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, மார்ச் 16—

"இம்மாநிலத்தில் உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்மீது 1965 முதல் 1967-வரை இலஞ்ச ஊழல் குற்றங்கள் குறித்து ஒரே புகார்தான் வந்தது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில், ஏ. எம். இராஜாவின் கேள்விக்குப் பதிலளித்தார்.

துணைக் கேள்விக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் மேலும் கூறியதாவது:—

"ஐ.ஏ.எஸ். அதிகாரிமீது இலஞ்ச ஊழல் குற்றஞ்சாட்டுவதற்கு, 'அரசின் தலைமைச் செயலாளர் அனுமதி தரவேண்டும்' என்றிருப்பதற்குப் பதிலாக, 'முதலமைச்சர் அனுமதி பெறவேண்டும்' என்று மாற்றவேண்டிய அவசியமில்லை. 'தலைமைச் செயலாளரும் ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரி என்பதால், அனுமதி தர மறுத்துவிடக் கூடும்' என்ற மறைமுகக் குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லை. இப்போதுகூட ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரிதான் தலைமைச் செயலாளராக இருக்கிறார். இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு ஒன்றுக்கு அனுமதியளித்திருக்கிறார்; எனவே, 'அவர் கவனிக்கமாட்டார்' என்று கூறுவது சரியல்ல.

"அனைத்திந்திய சர்வீசுகளை விரிவாக்குவது நல்லதல்ல என இந்த அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தியுள்ளது."

முகவரி மாற்றம்:
மா. கி. தசரதன்,
23, நாலாவது கிழக்குக் குறுக்குத் தெரு,
செனாய் நகர், சென்னை-30.
தொலைபேசி: 62048
(மாறுதல் இல்லை)

# ஆண்டுக்கு ஒரு வாரம் மரியாதை?

பீர்முகம்மது:—"அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் பணியாற்றுவோர், பயணிகளுடன் மரியாதையுடன் பழகுவதை வற்புறுத்துவதற்காக மரியாதை வாரம் கொண்டாட ஏற்பாடு செய்யப்படுமா?"

அண்ணா:—"மரியாதை நிரந்தரமாக இருக்கவேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. ஆண்டில் ஒருவாரம் மட்டும் மரியாதை காட்டிவிட்டு மற்ற நாட்களில் மரியாதை இல்லாமல் இருந்து விடுவதில் பயனில்லை."

(சட்டமன்றத்தில்)

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

றிலும் புதிய குடியிருப்புப் பகுதிகள், குடியிருப்பு இல்லத்தொகுதிகள் முதலியன ஏற்பட்டு வருகின்றன. அப்பகுதிகளில் குடியிருப்பவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, கூடுதலான வழித் தடங்களை இயக்க வேண்டியுள்ளது. அந்த வழித்தடங்கள் குறிப்பாக அவற்றின் தொடக்க நிலைகளில், உரிய ஆதாயம் அளிக்காது. ஆயினும், சமூகத் தேவையை முன்னிட்டு அவற்றை இயக்க வேண்டியுள்ளது.

சென்னை மாநகரப் பேருந்துப் போக்குவரத்துப் பணிகளில் பேருந்து நிற்கும் இடங்கள் பல உள்ளன; அத்தகைய பல இடங்களில் வண்டிகளை நிறுத்த வேண்டியுள்ளது. போக்குவரத்து நெரிசல் காரணமாகவும் பல இடங்களில் பேருந்துகளை அடிக்கடி நிறுத்த வேண்டியுள்ளது இக் காரணங்களால் டயர்களும், உதிரிப் பாகங்களும் பெருமளவுக்குத் தேய்ந்து போகின்றன. எனவே, நகரப் போக்குவரத்துக்களை நடத்துவதற்கு ஏற்படுகிற செலவு வெளியூர்ப் போக்குவரத்துக்களை இயக்குவதற்கு ஏற்படுகிற செலவைக் காட்டிலும் அதிகமாக உள்ளது; ஆனால், வருவாயைப் பொறுத்தமட்டில், நகரப் போக்குவரத்துமூலம் கிடைக்கும் வருவாய், வெளியூர்ப் போக்குவரத்தால் கிடைக்கும் வருவாயைவிடக் குறைவாகவே உள்ளது."

'டுபக்டமி'

(பெண்களுக்கான கருத்தடை ஆபரேஷன்)

'டுபக்டமி' மூலம் குடும்பத்தைக் கட்டுப்படுத்துங்கள்.

பெண்களுக்குச் சிறந்த குடும்பக் கட்டுப்பாட்டு முறை.

'டுபக்டமி' — சாதாரணமாக, பிரசவத்திற்குப் பின்னர் மூன்றாவது நாள் செய்யப்படுகிறது.

இதைச் செய்துகொள்ளும் பெண் 24 வயது உடையவளாகவும் மூன்று குழந்தைகளுக்குத் தாயாகவும் இருக்கவேண்டும்.

கணவன்—மனைவி இருவரும் உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்ட பின்னரே இந்த ஆபரேஷன் செய்யப்படும்.

எல்லா சர்க்கார் ஆஸ்பத்திரிகளிலும் இது இலவசமாகச் செய்யப்படும்.

ஆபரேஷன் செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 30 அலவன்ஸ் தரப்படும்.

இந்த ஆபரேஷன் ஆரோக்கியத்தைப் பாதிக்காது; அன்றாட வேலைக்குத் தடையாக இராது.

இது, ஆண்—பெண் உறவுக்குக் குந்தகமாக இராது; அதனால், கிடைக்கும் இன்பத்தைப் பாதிக்காது.

இந்த ஆபரேஷன் செய்துகொள்ள அருகாமையில் உள்ள சர்க்கார் பெண்கள் ஆஸ்பத்திரியில் பதிவு செய்து கொள்ளுங்கள்.

சிறிய குடும்பமே மகிழ்ச்சிகரமான குடும்பம்.

உங்கள் வாழ்வு முழுமையும் மகிழ்வு பெற குடும்பத்தை அளவோடு வைத்துக் கொள்ளுங்கள்.

மாநிலக் குடும்பக் கட்டுப்பாடு மற்றும் பொதுச் சுகாதார இயக்குநர், சென்னை-6.

குடும்பக் கட்டுப்பாடு

லூப் முறையின் அனுகூலம்

1. லிப்பியின் 'லூப்', கர்ப்பத் தடை செய்யவும் குழந்தைகளுக்கு இடையே போதிய இடைவெளி ஏற்படுத்தவும் உபயோகப்படுகிறது.
2. மணமான பெண்களுக்கு—குடும்பக் கட்டுப்பாட்டுக்கு 'லூப்'பொருத்தலாம்.
3. 'லூப்' பொருத்துவதற்கு முன்னர், எத்தனைக் குழந்தைகள் பிறந்திருந்தாலும் பரவாயில்லை; அதனால் 'லூப்' பொருத்துவதில் தடை எதுவும் இல்லை.
4. 'லூப்' சரியானபடி பொருத்தப்பட்டால், கணவனுக்கும் சரி—மனைவிக்குச் சரி—அது இருப்பதே தெரியாது.
5. டாக்டரால் ஒரு தடவை 'லூப்' பொருத்தப்பட்டால் போதும்; மற்ற முறைகளைப்போல் மீண்டும் கருத்தடைச் சாதனங்களைத்தேடிப் பெற வேண்டிய அவசியம் இதில் இல்லை.
6. அறுவைச் சிகிச்சைபோல் 'லூப்' மாற்ற முடியாத கருத்தடை முறை அல்ல; தேவையானபோது இதை நீக்கிவிடலாம். பின்னர் மீண்டும் கருத் தரிக்கலாம்; இதனால் இந்த முறையைக் கையாள கணவர்—மனைவியின் எழுத்து மூலமான சம்மதம் தேவையில்லை.
7. மீண்டும் குழந்தை பெற விரும்பினால், டாக்டரிடம் போய் 'லூப்'பை எடுத்துவிடலாம். பின்னர் ஒரு மாதத்திற்குள் மீண்டும் கருத் தரிக்கலாம். அதனால், கர்ப்பம் தரிப்பதற்கோ பிறக்கும் குழந்தைக்கோ எந்தவிதக் கெடுதலும் இல்லை.
8. 'லூப்' செலவில்லாத ஒன்று; இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் இது இலவசமாகக் கிடைக்கும்.
9. நோய் நொடி இருப்பதாகக் கண்டுபிடிக்கவும், இருந்தால் அவற்றுக்குச் சிகிச்சை அளிக்கவுமான வாய்ப்பு. 'லூப்' பொருத்த வரும் ஒவ்வொரு பெண்ணுக்கும் கிடைக்கிறது. பெண் உறுப்பில் உள்ள கோளாறுகள், புற்று நோய்—காச நோய் போன்றவற்றைக் கண்டுபிடிக்கவும், சிகிச்சை அளிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது.
10. இன்று நமக்குத் தெரிந்துள்ள முறைகளில், 'லூப்' சிறந்தது என்று இதுவரை வெளியான ஆராய்ச்சிமுடிவுகள் கூறுகின்றன.

வேறு விவரம் தேவையானால், கீழ்க்கண்ட இடங்களில் பெறலாம்:—

1. துணை நெறியாளர், குடும்பக் கட்டுப்பாடு, சென்னை-6
2. பெண்கள்-குழந்தைகள் ஆஸ்பத்திரி, எழும்பூர், சென்னை-8
3. அரசினர் கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, திருவல்லிக்கேணி, சென்னை-5
4. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை-10

மாநிலக் குடும்பக் கட்டுப்பாடு மற்றும் பொதுச் சுகாதார இயக்குநர், சென்னை-6

# ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள்— அண்ணா மறுப்புரை

"இம்மன்றத்தில் பேசியவர்களில் பெரும்பாலோர் 'நகரங்களைக் கவனிக்கும் அளவுக்குக் கிராமங்கள் கவனிக்கப்படவில்லை; அங்கே பாதை சரியில்லை; குடிநீர்ப் பிரச்சினை சரிவர கவனிக்கப்படவில்லை' என்றார்கள்.

"இதற்கெல்லாம் அதிகம் செலவழிக்க வேண்டும் என்றால் அந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன். எல்லாக் கட்சிகளும் அதை ஏற்றுக்கொள்ளும்; 'கிராம வளர்ச்சியில்தான் நாட்டின் வளர்ச்சியே இருக்கிறது' என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர்.

"பொதுவாக 'கிராமங்களில் பாதை சரியில்லை; குடிதண்ணீர் வசதி போதிய அளவுக்குஇல்லை' என்றார்கள்; ஆனால், நீர்ப் பாசனத்திற்கென்று செலவிடப்படுவது கிராமத்திற்குத்தானே தவிர, நகரத்திற்கு அல்ல! ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் முதலீடும் கிராம வளர்ச்சிக்குத் தான் செலவிடப்படுகிறது என்பதை மறக்கக் கூடாது!

சமுதாய நலத் திட்டங்கள் அனைத்தும் கிராம வளர்ச்சிக்காகத் தான் பயன்படுகிறது; கிராமங்களிலே அமைக்கப்படும் பள்ளிகள், மருத்துவமனைகள், மனமகிழ் மன்றங்கள் அனைத்துக்கும் அரசு பெருமளவு பணம் கொடுத்து உதவி செய்கிறது.

கிராமத்திற்குத்தான் நீர்ப்பாசன வசதிகள் செய்யப்படுகின்றன! விவசாயத்திற்கென்று பயன்படும் மின்சார உற்பத்தி, யூனிட்டுக்கு 16 காசு வீதம் வசூலிக்கப் படாமல் இப்போது 9 2 காசு தான் வசூலிக்கப்படுகிறது: இது, கிராமத்திற்குக் காட்டப்படும் சலுகையல்லவா? இந்தச் சலுகை போதாதென்றால், இன்னும் நிரம்ப சலுகை தரப்பட வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்; ஆனால், 'கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டு விட்டன' என்று கூறுவது, அவசரப்பட்டுக் கூறுகிற வாதமாகும்! அதிலும், 'இந்த அரசு வந்து புறக்கணித்து விட்டது' என்பது மிகவும் அவசரமான வாதமாகும்.

பிரச்சாரத்திற்கு வேண்டுமானால் இது பயன்படலாம்; ஆனால், இதை வைத்துக்கொண்டு கிராம மக்களை ஏமாற்றிவிட முடியுமென்று நம்புவீர்களானால், அது நடக்காது!

கிராமப் பகுதியிலுள்ள புஞ்சை நிலத்திற்குத்தான் வரி விலக்கு! சென்னைக்கு அல்ல!

தஞ்சை மாவட்டத்தில், 'இரண்டாவது போக சாகுபடிக்குத் தண்ணீர் தீர்வை தேவையில்லை' என்று அறிவித்திருக்கிறோம்!

'பாதை சரியில்லையே' என்கிறார்கள். நகரத்திற்கு ஏன் இதைச் செய்கிறோம் என்றால், நகராட்சி—மாநகராட்சி வருமானத்தில், 'வீட்டு வரி' என்ற முறையில் ரூ. 554.95 இலட்சம் கிடைக்கிறது. சென்னை நீங்கலாக மற்ற நகராட்சிகளிடமிருந்து ரூ. 455 இலட்சம் கிடைக்கிறது; ஆனால் கிராமங்களிடமிருந்தோ ரூ. 91.75 இலட்சம்தான் கிடைக்கிறது. வெண்ணெய் அளவுக்கு நெய் காய்ச்சப்படுகிறது.

வேலை இருக்கிறவர்களும், வேலை இல்லாதவர்களும் நகரத்திற்கு வருகிறார்கள். நகரத்திலுள்ள வசதிகளைக் கிராமத்தினரும் அனுபவிக்கிறார்கள்; ஆகவே இந்த இரண்டும் ஆதாரத்தின் அடிப்படையில் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகளல்ல — ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளாகும்!

—(சட்டமன்றத்தில் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது)

# திருவொற்றியூர் தி.மு.க தோழர்களுக்கு:

"திருவொற்றியூர் நகர தி.மு.க கிளை சார்பில் 20—3—68 மாலை 5-மணிக்கு எண் 56, சன்னதி தெருவில் (செஷ்டிமடம்) அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள தலைமையிலும்—பேராசிரியர் அறிவழகன் எம்.எல்.சி, செங்கை மாவட்ட செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ., அ.பொ. அரசு எம்.எல்.ஏ., சைதை வட்டச் செயலாளர் சி. இராமலிங்கம் முன்னிலையிலும் மிக முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்; பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்; வட்டப் பிரதிநிதிகள்—செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று செயலாளர் வை. பார்த்தசாரதி அறிவிக்கிறார்.

## பொதுக்கூட்டங்கள் 19—3—68

**மதுரை**

12-வது வட்டார அண்ணா பாசறை சார்பில் மாலை 6 மணிக்கு கூடலழகிய பெருமாள் கோயில் முன்னிலையில்; தலைவர்: இரா. பழனி; பேசுவோர்: கே.ஆர்.பி. மணிமொழியன், டி. ஆர். இராசன் பி.ஏ.பி.எல்., கா. காளிமுத்து பி.ஏ., சே. ஜின்னா, மற்றும் பலர்.

**பார்த்திபனூர்**

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: மு. சேதுராமன்; பேசுவோர்: தேவகி பாண்டியன், தமிழ்க்குடிமகன் எம்.ஏ., அ. வே. அரவரசன், இரா. அழகு, இரா. குருசாமி.

'காண்டோம்'

அடிக்கடி கருத் தரிப்பது ஆரோக்கியத்தைக் கெடுக்கும். கருத் தரிப்பதைத் தள்ளிப் போடுவது எப்படி?

'காண்டோம்' (ரப்பர் கருவி) உபயோகிப்பது மூலம் கருத் தரிப்பதைத் தடுக்கலாம்.

நீண்ட காலம் 'காண்டோம்' உபயோகப்படுத்துவதுகூட எந்தவிதமான கெடுதலும் விளைப்பது இல்லை. தாம்பத்திய சுகத்தில் அது பெரும் அளவில் தலையிடுவதும் இல்லை.

'காண்டோம்' கீழ்க்கண்ட இடங்களில் இலவசமாகக் கிடைக்கும்:—

எல்லா அரசினர் ஆஸ்பத்திரிகள்

பிரைமரி ஹெல்த் சென்டர்கள்

மகப்பேறு மற்றும் குழந்தைகள் மருத்துவமனைகள்

விவரங்களுக்கு உங்கள் டாக்டரிடம் ஆலோசனை செய்யுங்கள்.

மாநிலக் குடும்பக் கட்டுப்பாடு மற்றும் பொதுச் சுகாதார இயக்குநர், சென்னை-6

## சென்னை மாநகராட்சி நிகழ்ச்சி

19—3—68 மாலை 6-மணிக்கு மேயர் டாக்டர் அபிதுல்லா பெய்க் தலைமையில்—எம். எஸ். வீரகேசரி முன்னிலையில் சுகாதார அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்கள், இராசா அண்ணாமலைபுரம் சீனிவேஸ் சாலையிலுள்ள சென்னைமாநகராட்சி விளையாட்டுத் திடலின் கூடத்திற்கு அடிக்கல் நாட்டுவார்.

## ஊர்க்காவல் படை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யினர் மேற்கொள்ளும் பணி வேறு. ஊர்க்காவல் படையினருக்கு அரசினரால் இலவசமாக உடையும் பணியாற்றும் காலத்தில் ஒரு நாளைக்கு ரூ. 2 50-படியும் அளிக்கப்படுகின்றன. ஊர்க்காவல் படைக்கு ஆகும் செலவில் பாதியை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. 1965—66-ல் இதற்காக ரூ. 7,60,000 செலவிடப்பட்டது."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி, அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.